ராணி காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
மொட்டைத் தலை
மந்திரவாதி
ரூ. 3

கல்வியே உனது சொத்து

செல்வி இ. ஜீவா

படிக்கப் போகும் பெண்ணே நீ
படித்துப் படித்து முன்னேறு!
படித்துப் பட்டம் பலபெற்றுப்
பாரில் சிறந்த பெண்ணாகு!

பட்டம் பெற்றுப் பலனென்ன
பணமும் காலமும் வீண் என்று
திட்டமாய் எண்ண வேண்டாம் நீ
தேசம் புகழும் பெண்ணாவாய்!

நமது நாடு மட்டுமல்ல
நானில நாடுகள் எல்லாமும்
தமது பெண்களின் முன்னேற்றம்
தன்னையே எண்ணும் காலமிது!

பெண்ணால் வாழப் போகிறது
பெரிதாம் இந்த உலகம்மா!
கண்ணாய்ச் சிறந்து நிற்பாய் நீ
கல்வியே உனது சொத்தாகும்!

யானைக்கு பிடித்த மொழி!

யானைப்பாகன்கள் யானைகளைப் பழக்குவதற்கு கையாளும் மொழி எது தெரியுமா?

மலையாளம், இந்தி, அரபி, பாரசீகம், கன்னடம் என்று இதில் ஏதாவது ஒன்றை நீங்கள் நினைத்தால் அது மிகவும் தவறு. இதில் எந்த மொழியும் இல்லை.

பழங்காலத்தில் குகை மனிதர்கள் பேசிய பாஷையைத்தான் பாகன்கள் இன்று வரை பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மொழியைத் தவிர வேறு மொழிகளை யானைகள் எளிதில் புரிந்துகொள்வதில்லை என்று கூறப்படுகிறது.

தபால்துறை!

தபால்துறையைப் பற்றிய சில விவரங்களை தருகிறோம். தெரிந்து கொள்ளுங்கள்.

இந்தியாவில் தபால்துறை முதன்முதலில் 1766-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ராபர்ட் கிளைவ்தான் முதன்முதலாக தபால்துறையை இந்தியாவில் தொடங்கி வைத்தார்.

கிழக்கிந்திய கம்பெனிகளின் கடிதங்கள்தான் இந்திய தபால்துறை மூலம் முதன்முதலாக பட்டுவாடா செய்யப்பட்டன.

1837-ம் ஆண்டுதான் தபால்துறை பொதுமக்களுக்காக பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு நிறைய தபால் நிலையங்கள் தொடங்கப்பட்டன.

இந்தியா 1852-ம் ஆண்டுதான் தன் முதல் தபால் தலையை சிந்து மாநிலத்தில் (தற்போதைய பாகிஸ்தான்) வெளியிட்டது.

ராணி காமிக்ஸ் – 330
(மாதம் இருமுறை இதழ்)
மார்ச் 16 – 31
1998

முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்

மொட்டைத் தலை மந்திரவாதி

டயானா நியூயார்கிலிருந்து மாயாவியைக் காண காட்டுக்கு வந்திருந்தாள். ஒரு நாள்—
அன்பே! என்னுடன் நீந்த வாருங்களேன்!
எனக்கு வேலையிருக்கிறது! ஆற்றில் வெள்ளம். தனியாகப் போகவேண்டாம்!
அவருக்கு எப்ப பார்த்தாலும் வேலைதான். எனக்கு ஒரு படகு மட்டும் கிடைத்தால் போதும்!
டயானா ஒரு படகில் ஏறி புறப்படப் போனாள். அப்போது—
அம்மா! ஆற்றில் இழுப்பு அதிகமாக இருக்கிறது. அருவி வேறு இருக்கிறது. ரொம்பதூரம் போக வேண்டாம்.
பயப்படாதே! எனக்கு படகு விடத் தெரியும்!

டயானா படகில் சென்றுகொண்டு இருந்தாள்.
ஆகா! அவரும் வந்து இருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். துடுப்பு போடுமுன்னே படகு விரைவாகச் செல்கிறதே!
இழுப்புசக்தி அதிகமாக இருக்கிறதே! படகைத் திருப்ப முடியலையே?
ஏதோ இரைச்சல் சத்தம் கேட்கிறதே! அருகில் அருவி இருக்கிறது போலிருக்கிறது!

ஆற்றுத் தண்ணீர் படகை இழுத்துக் கொண்டு அருவிக்கு வந்தது.
அய்யோ! படகை நிறுத்த முடியலையே?
படகு அருவிக்குள் நட்டுக் குத்தாக விழுந்தது. டயானா தூக்கி எறியப்பட்டாள்.
டயானா அதிருஷ்டவசமாக பாறையின் மீது விழாமல் தண்ணீருக்குள் விழுந்தாள்.
மேலே வந்தவள் படகைத் தேடினாள்.
அதோ படகு! நல்லவேளை தப்பிச்சேன்!
டயானா படகை நோக்கி நீந்தினாள்.
அது படகு அல்ல முதலை!
முதலையைக் கண்டு டயானா வேகமாக நீந்தினாள். முதலை அவளை விரட்டி வந்தது.

டயானா உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு கொடியைப் பிடித்து சரசரவென ஏறினாள்.
அடேயப்பா! குகை போல வாயைப் பிளக்கிறதே!

மரத்தில் ஏறிய டயானா அப்படியே நகர்ந்தாள்.
அய்யோ கிளை ஆடுகிறதே! வழுக்கி விழுந்தாள் முதலை என்னை தீர்த்துக்கட்டிவிடுமே!

மரம்விட்டு தாவித் தாவி டயானா வெகுதூரம் வரை வந்துவிட்டாள்.
எப்படியோ தப்பிவிட்டேன்! குகைக்கு திரும்பிப் போக வழிதெரியவில்லையே?
அது என்ன...?

அந்த காட்டுக்குள் இதுவரை பார்த்திராத— பனி மூட்டத்துக் குள்ளே ஒரு மிரட்சியூட்டும் அரண்மனையொன்று தெரிந்தது.
அதே நேரம்—
டயானாவை ஏன் போகவிட்டாய்?
மாயாவி! நான் சொல்லியும் கேட்காமல் போய் விட்டார்கள்!
உடனே மாயாவி டயானாவைத தேடி புறப்பட்டார்.
டயானா துணிச்சல் காரிதான். எங்கே போயிருப்பாள்!
ஆற்றில் வெளளம போகிறது! அருவி வேறு இருக்கிறது!
மாயாவி அருவிக்கு வந்தார்.
எங்கே போயிருப்பாள்? ஒருவேளை அருவியில் விழுந்திருப்பாளோ...!


மாயாவி பாறை மீது ஏறிப் பார்த்தார்.
அதோ அவனுடைய படகும், தொப்பியும் மிதக்கிறதே! இதில் முதலை கிடக்குமே!
டயானா... டயானா...!

ஆற்றுக்கு அந்தப் பக்கம் சில மைல் தொலைவில் டயானா இருந்தாள்.
பாதை போய்கிட்டே இருக்கு! இது எந்த இடம்! அந்த அரண்மனைக்கு போனால் கூட நல்லதுதான்!

ஒரு காட்டுவாசி வேகமாய் வந்து டயானா மீது மோதினான்.



டயானா புரியாமல் குழம்பினாள்.


அதற்குள்—
குரன்! முதலில் ஆற்றை சல்லடை போட்டுத் தேடுங்கள்!
இப்போதே தேடுகிறோம் மாயாவி!

அந்த அரண்மனை மொட்டைத்தலை மந்திரவாதியினுடையது!


பள்ளத்தாக்கு மக்கள் அவனுக்குப் பயந்து வேலை செய்றாங்க!
அவனை எதிர்த்தால் அவ்வளவுதான்!
சிகப்பு உடை அணிந்தவர்கள் எதிர்ப்பவனை பிடித்து
மொட்டைத்தலை மந்திரவாதியின் அறைக்குள் அடைப்பார்கள்!


அங்கே அவனை பொம்மையாக்கிவிடுவார்கள். பொம்மை அசையாது. ஆனால் மூச்சுவிடும்!
மந்திரவாதியின் தோட்டம் முழுக்க இப்படிப்பட்ட பொம்மைகள் நிறைய உண்டு!
இதுதான் அவர்களுக்கு தண்டனை!

இது கட்டுக்கதை! நான் நம்ப மாட்டேன்!
சத்தியமா! நான் என் கண்ணால் பார்த்தேன்!

ஒவ்வொரு அமாவாசை அன்றும் தோட்டத்தில் உள்ள பொம்மைகளுடன் மந்திரவாதி பேசுவான். அதற்கு பொம்மைகளும் பதில் சொல்லும்.
நான் சொல்கிறது கேட்குதா?
நல்லாக் கேட்குது!

அய்யோ! சிவப்பு உடைக்காரர்கள் வருகிறார்கள். மறைந்துகொள்ளுங்கள்!
இதுவரை இப்படிப்பட்ட செயலை கேட்டதில்லையே?

சிவப்பு உடை அணிந்த வீரர்கள் குதிரைகளில் பாய்ந்து வந்தார்கள்.
டயானா புதருக்குள் மறைந்துகொண்டாள்.
சிவப்பு உடை வீரர்கள் சரி! மற்றபடி அவன் சொன்னது மூடநம்பிக்கை!
மொட்டைத்தலை மந்திரவாதியையும், அவன் தோட்டத்தையும் பார்க்க ஆவலாய் இருக்கிறதே!
டயானா மந்திரவாதியின் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டாள்.
மந்திரவாதியைப் பற்றிச் சொன்னதை நம்பக்கூடாது!

வழியில் சிலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் டயானா கேட்டாள்.
மந்திரவாதி கொடுமையானவன்! அரண்மனை மர்மம் நிறைந்தது!
மந்திரவாதியைப் பற்றிச் சொன்னது உண்மை. அவனுக்குத் தான் நாங்கள் உழைக்கிறோம்!
மோசமான இடத்துக்குச் சென்று ஏன் வம்பில் மாட்டிக் கொள்ளணும். மாயாவியிடம் போய் இதைச் சொல்வோம்!
டயானா திரும்பி நடந்தாள்.
ஆனால் மொட்டைத்தலை மந்திரவாதி சன்னல் வழியாக டயானாவைப் பார்த்தான்.

உடனே அரண்மனையில் இருந்து சிவப்பு உடை காவலர்கள் புயலென புறப்பட்டார்கள்.
சிவப்பு உடைக்காரர்கள் என்னை நோக்கியல்லவா வருகிறார்கள்!
ஒருவன் வந்த வேகத்திலேயே டயானாவை தூக்கினான்.
டயானாவை குதிரையில் போட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

டயானாவை அரண்மனைக்குள்
கொண்டுவந்ததும் கதவு சாத்தப்
பட்டது.


அதேநேரம்— ஆற்றில்.காட்டுவா
சிகள் டயானாவின் உடலை வலை
போட்டுத் தேடினார்கள்.


மாயாவி இதுவரை எதுவும் சிக்க வில்லையே?
நன்றாகத் தேடுங்கள்!


மந்திரவாதியின் அரண்மனையில் இருந்து தப்பியவன் ஆற்றை நோக்கி தலைதெறிக்க ஓடிவந்தான.
ஆற்றை கடந்துவிட்டால் தப்பிவிடலாம்! படகில் வருபவர்கள் எனக்கு உதவுவார்களா?

நாங்கள் ஆற்றில் மூழ்கிய ஒரு பெண்ணைத் தேடுகிறேம். உன்னை எப்படி அழைத்துப் போக முடியும்!


அந்தப் பெண் சாகலை. நான் உயிரோட பார்த்தேன்!
என்ன சொல்றே! இவனை மாயாவியிடம் அழைத்துச் செல்லலாம்!


அவன் மாயாவி முன் நிறுத்தப்பட்டான்.
மாயாவி! நீங்கள் தேடுகிற பெண்ணை நான் உயிரோட பார்த்தேன்!
எங்கே பார்த்தே? எப்ப பார்த்தே?


மொட்டைத்தலை மந்திரவாதி பற்றிச் சொன்னேன். அவன் அரண்மனைக்கு போயிருக்கக்கூடும்!
மொட்டைத்தலை மந்திரவாதியா?
டயானாவிடம் சொன்ன கதையை மாயாவியிடமும் சொன்னான்.
இப்படி கிழக்கே போனால் அந்த அரண்மனை வரும். நீங்கள் போக வேண்டாம்!
சூரன்! இவனுக்கு பரிசு கொடு! எனக்கு ஒரு கட்டுமரம் கொடு!
மாயாவி கட்டுமரத்தில் ஏறிப் புறப்பட்டார்.
அது என்ன மொட்டைத்தலை மந்திரவாதி. நான் கேள்விப்பட்டதில்லையே?
நல்லவேளை! டயானா உயிரோடுதான் இருக்கிறாள். ஹீரோ வேகமாகப் போ!

மொட்டைத்தலை மந்திரவாதி யிடம் டயானா எப்படிச் சிக்கியிருப்பாள்!
மாயாவி மந்திரவாதியின் அரண்மனை நோக்கிச் சென்றார்.
அரண்மனையில்—
இன்று அமாவாசை! மந்திரவாதி உன்னை சந்திப்பார்!
அமாவாசை இரவு—
வேலிக்கு அப்பால் காட்டுவாசிகள் வேடிக்கை பார்த்தார்கள். டயானா சன்னல் வழியாக அந்த பொம்மை மனிதர்களை நோட்டமிட்டாள்.


மந்திரவாதி தோட்டத்துக்கு வந்தான்.
செல்வங்களா நான் பேசுவது கேட்கிறதா?
கேட்கிறது!
அவன் கேட்பதற்கு பொம்மைகள் கீச்சுக்குரலில் பதிலளித்தார்கள்.

உங்க ஆட்களுக்கு ஏற்பட்ட கதியை பார்த்தீங்களா...! ஒழுங்கா போய் எங்களுக்காக உழையுங்க...! இல்லை உங்களையும்...

அடப்பாவிகளா? இது என்ன மாய மந்திரம்! பொம்மைகளுக்கு உயிர் இருக்கிறதா? யார் இந்த மந்திரவாதி?
ஏய் பெண்ணே! மந்திரவாதி உன்னை பார்க்க வேண்டுமாம்!
அங்கே போ! அங்கேதான் மந்திரவாதி இருக்கிறார்!
கடவுளே! இது என்ன இடம்! இங்கேதான் மனிதர்களை பொம்மைகளாக மாற்றுகிறானா?


திடீரென்று திரையை விலக்கிக்கொண்டு மந்திரவாதி வெளியே வந்தான்.
ஆகா... நீ பேரழகிதான்! வா பெண்ணே...!
ஆ...!


நீ எதற்காக என் அரண்மனைப் பக்கம் வந்தாய்?
உன் ஆட்கள்தான் என்னை தூக்கி வந்தாங்க! இங்கே என்ன நடக்கிறது? யார் நீ?

நீ தைரியசாலிதான்! என்னைப பறறி உனக்குத் தெரியும். என் பேச்சைக் கேட்காதவர்களைத்தான் பொம்மையாக மாற்றுவேன்!
நல்லநேரத்தில் வந்திருக்கிறாய். பணத்துக்கும், மாயசக்திக்கும் குறையில்லை. ஆனால் என்னை தனிமை வாட்டுகிறது!
எனக்கு மனைவி தேவை! அதற்குத்தான் நீ வந்திருக்கிறாய்!
மனைவியா? உனக்கா? விளையாடுகிறாயா?
உனக்கு என்ன பைத்தியமா?
எனக்கு பைத்தியமில்லை!

எனக்காக உழைக்கிறவங்க உனக்கு உழைப்பாங்க. எனக்கு நீ கீழ்ப்படியாவிட்டால், நீயும பொம்மையாகிவிடுவாய். தெரியுமா?
தெரியும்!

வா உன்னை மகாராணியாக்கு கிறேன்!
உன் எண்ணம் நிறைவேறாது. அதற்கு சம்மதிக்கமாட்டேன்!

மதிகெட்டவளே! எனக்கு கீழ்ப்படியாவிட்டால் நடப்பது தெரியுமல்லவா! வா என்னுடன்!
மொட்டைத்தலை மந்திரவாதி அவனை தரதரவென இழுத்துச் சென்றான்.
என்னுடைய மந்திரசக்தி உன்னை பொம்மையாக்கப் போகிறது பார்!

அதேநேரம்—
பயப்படாதீர்கள்! ஒரு வெள்ளைக்காரப் பெண் இங்கே வந்தாளா? அவளைத் தேடி வந்திருக்கிறேன்!
பார்த்தோம் அவளை! எவ்வளவோ எச்சரித்தும் சென்று விட்டாள்!
அவள் தப்பி செல்ல முயன்றாள். ஆனால் அதற்குள் சிவப்பு குதிரை வீரர்கள் அவளை அலேக்காக தூக்கிச் சென்றுவிட்டார்கள். மந்திரவாது அரண்மனைக்கு தூக்கிப் போனார்கள்.
மாயாவி ஒரு கிராமத்துக்கு வந்தார்
மாயாவி வருகிறார்!
மந்திரவாதியை அழிக்க வந் திருப்பார்!
மாயாவி... மாயாவி...


யார் அந்த மந்திரவாதி?
அவன் மிகப் பயங்கர மானவன்!
எதிரியை குட்டி பொம்மையாக்கி விடுகிறான்!
மகா சக்தி படைத்தவன். நினைத்தாலே குலை நடுங்குகிறது!

அந்தக் கொடியவனை அழிக்க இதுதான் சரியான நேரம்!
மாயாவி, மொட்டைத்தலை மந்திரவாதியின் கோட்டையை நோக்கிச் சென்றார்

ஒரு காவலன் மாயாவியைப் பார்த்தான்.
அரசே! முகமூடியும் மக்களும் நம்மைத் தேடி வருகிறார்கள்!
டொக்...! டொக்...!
இங்கே வேலை நடக்குது! அவர்கள் வரட்டும் எனக்கென்ன பயம்?
முகமூடியா...? நிச்சயமாக அவராகத்தான் இருக்கும்!
மாயாவி, மந்திரவாதியின் அரண்மனையை அ்டைந்தார்.
ஏய்... மந்திரவாதி! கதவைத் திற!
என்ன தட்டியும் கதவு திறக்கவே இல்லை.
டொக்...! டொக்...!

அரண்மனையைச் சுற்றி தோட்டத்தில் இருக்கும் பொம்மை மனிதர்களை மாயாவி பார்த்தார்.
மந்திரவாதி பால்கனிக்கு வந்தான்.
ஏய்... முகமூடி! உனக்கு என்ன வேண்டும்?
எனக்கு டயானா வேண்டும்!
ஓ... அவளா? இருக்காளே! கொண்டுவருகிறேன் பார்!
இதோ நீ தேடிவந்தவள்! வேற யாரைப் பார்க்கணும்?
மந்திரவாதி பொம்மை யாக்கப்பட்டிருந்த டயானாவை காட்டினான்.


இவள் சின்னப் பொண்ணு! சிங்காரி! இங்கேயே நில்லு!
தோட்டத்தில் இருந்த மற்ற பொம்மை மனிதர்களோடு அவளையும் நிற்கவைத்தான்.


வேலிக்கு வெளியே இருந்த மாயாவியும் மற்றவர்களும் திகைத்து நின்றார்கள்.
மந்திர சக்தியால் அவளையும் பொம்மை யாக்கிவிட்டான்!
அவளுக்கு உயிர் இருக்கும். ஆனால் உணர்வு இருக்காது!


டேய்... பார்த்தது போதும், கிராமத்துக்கு ஓடுங்கடா.
உம்... வேகமாகப் போங்க!
காவலர்கள் விரட்டினார்கள்.
அதற்குள் மாயாவி துப்பாக்கியை எடுத்து காவலர்களை நோக்கிச் சுட்டார்.
டுமீல்...!
டுமீல்...!
காவலர்கள் தலை தெறிக்க ஓடினார்கள்.
அதற்குள் மாயாவி வேலியில் ஏறி தோட்டத்துக்குள் குதித்தார்.

திடீரென்று மந்திரவாதி ஒரு பட்டனைத் தட்ட தரை வாயைப் பிளந்துகொண்டது. அதற்குள் மாயாவி விழுந்தார்.
ஆவ்...!
சே! முன்யோசனை இல்லாமல் இப்படி மாட்டிக் கொண்டேனே!
மாயாவி பாதாளக்தில் விழுந்தார்.
மேலே இருந்து மந்திரவாதி எட்டிப் பார்த்து எகத்தாளமாகச் சிரித்தான். அவன் கதவை மூடியதும் இருள் கவ்விக்கொண்டது.
திடீரென மாயாவி மீது ஒளிவெள்ளம் பாய்ந்தது.
ஏய்... முகமூடி! வசமாக மாட்டிக்கொண்டாய்! துப்பாக்கியை தூரப் போடு! இல்லை தூள் தூளாகிவிடுவாய்!

அதற்குள் நான்கைந்து சிகப்பு உடைக் காவலர்கள் பாதாளத்துக்கு வந்து மாயாவியை கட்டையுடன் சேர்த்துக் கட்டினார்கள்.
இனி நீ தப்பிக்க முடியாது!
மந்திரவாதி இனி உன்னை வசமாக கவனிப்பார்!
மாயாவியை இரகசிய கூடததுக்கு அழைத்துப் போனார்கள். அங்கே மந்திரவாதி இருந்தான.
நீதான் மாயாவியா? வா... வா! உனக்காகவே தோட்டத்தில் டயானாவுக்கு அருகில் இடம் வைத் திருக்கிறேன்!

ஏய்... டயானாவையும், மற்றவர்களையும் எங்கே?
ஓகோ! என் பொம்மை கொலு பற்றி கேட்கிறாயா?
என் கட்டளைக்கு அடி பணியாவிட்டால் அவர்களை பொம்மையாக்கிவிடுவேன் ஏன்று பயந்தே என் பேச்சைக் கேட்கிறார்கள்.
வெளியே— வெற்றியோடு திரும்பும் மாயாவியை வரவேற்க காட்டுவாசிகள் தயாராக இருந்தார்கள்.
மாயாவி! உள்ளே போனதும் மந்திரவாதி ஓடிவிட்டான்!
இத்தோடு அவன் தொலைஞ்சான்!
இனி நமக்கெல்லாம் விடுதலை!

ரொம்ப நாளாகவே நீ வந்து அவர்களை விடுவிப்பேன்னு காத்து இருக்காங்க! நடப்பதை அவர்கள் நேரில் பார்க்கட்டும்!
அவர்களும் பார்த்தால்தான் என் கட்டளைப்படி நடப்பாங்க!
அப்படியா? சின்னச் சின்ன பொம்மைகளாக எப்படிச் செய்கிறாய்?
குழம்பு தயாராக இருக்குது! உன்னையும் இப்ப பொம் மையாக்கப் போகிறேன்!
அப்படியே நில்! அசையக்கூடாது!
மொட்டைத்தலை மந்திரவாதி மாயாவியைப் பார்த்தபடியே பொம்மை செய்தான்.

எப்படி பார்த்தியா? பெரிய சிற்பி போல உன்னை அப்படியே பொம்மையாக வடித்துவிட்டேன்!
அப்படித்தான் மற்றவர்களையும் பொம்மையாக்கி நிறுத்தியிருக் கிறேன்!
இதை உன் மக்களிடம் காட்டினால் நீதான் என்று நினைத்துக்கொள்வார்கள்!
இது வெறும் பொம்மை!
நீ மற்றவர்களைப் போல் முட்டாள் இல்லை. புத்திசாலி!
அப்படியானால் டயானாவை எங்கே?
மந்திரவாதியின் கதையை மாயாவி முடிச் சிருப்பாரா?
இனி நமக்கு விடுதலைதான்!
ஏய்... அதோ மந்திரவாதி!

ஏய்... முட்டாள்களா? உங்கள் மாயாவியின் நிலை மையை பார்த்தீர்களா?
காட்டுவாசிகள் பொம்மையைப் பார்த்ததும் மாயாவியின் மீது இருந்த நம்பிக்கை பொடிப்பொடியாகிப் போனது.

அந்த அறையில் இருந்த ஒருவன் மைக்கில் உரக்கப் பேசிக்கொண்டு இருந்தான்

தோட்டத்தில் பொம்மை
களுக்கு நடுவே ஒலிபெருக்கி
இருந்தது.
மகா மந்திர வாதியே... நீதான் எங்கள் கடவுள்!
முட்டாள்களே! உங்கள் மாயாவி எனக்கு ஈடாகுவானா? யாரும் என்னை ஆட்டவோ அசைக்கவோ முடியாது!
காட்டுவாசிகள் கிராமத்
துக்கு திரும்பினார்கள்.
ஆய்வுக்கூடத்தில் மாயாவி
துருதுருவென இருந்தார்.
இந்தக் கட்டையை சரியாகக் கட்டேன்!
இதோ வர்றேன!


இது போதுமா?
இதை முதலில் வாங்கிக்கொள்!
உப்ப்...!
மாயாவி அவனைத் தாக்கினார்.


மாயாவி காவலனை வீழ்த்திவிட்டு, மேசையில் இருந்த கத்திரிக்கோலால் கைக்கட்டுக்களை அறுத்தார்.
கத்திரி கூர்மையாத்தான் இருக்கும்! சீக்கிரமா வேலையை முடிக்க வேண்டும்!


இந்த சுண்டைக்காய் பயல் முகமூடியை நூதன முறையில் ஒழிச்சுக் கட்டணும்!
அட! நம் ஆள் அடிபட்டு கிடக்கிறான்! முகமூடி பயங்கர மான ஆளாக இருப்பான் போலிருக்கு! அவனை எங்கே?
மந்திரவாதியின் மேசைமேல் அவனைப் போன்ற பொம்மை ஒன்று இருந்தது. அதன் நெற்றியில் மாயாவியின் முத்திரை இருந்தது.
மாயாவி தோட்டத்துக்கு வந்தார்.
மந்திரவாதி செய்தது எல்லாம் பொம்மைகள்! அப்படியானால் இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா


கைதிகளாக இருந்தவர்கள் நிலவறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு வேலை செய்துகொண்டிருந்தார்கள்.


வெளி உலகத் தொடர்பே இல்லாமல் கைதிகள் மந்திரவாதிக்காக கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


மாயாவி பொம்மையை எடுத்து ஒருவனிடம் காட்டினார்.
இதோ இது உன்னைப் போல பொம்மை!
தோட்டத்தில் இருக்கும் பொம்மைகளை ஒத்தவங்க எங்கே?


எல்லாரும் மந்திரவாதியின் அடிமைகள்!
மந்திரவாதி ஏமாற்றுக்காரன். பித்தலாட்டக்காரன். ஆனால் ஊர் கூடி சொல்ல முடியவில்லையே!
அதோ காவலாளி வருகிறான்!

காவலாளிகள் வந்தார்கள்.
இங்கென்ன விருந்தா நடக்குது?
என்ன பேச்சு! போய் வேலையைப் பாருங்க!

ஏய்... இந்த புதுக் கைதியை கட்டிப்போட வில்லையே?
இதோ குண்டும் சங்கிலியும் எடுத்து வர்றேன்!
இரண்டாமவன் மறையவும், மாயாவி அவனைத் தாக்கினார்.
டேய்... ஒழுங்கா வேலையைப் பாரு!
சரிடா!
முகமூடி காலில் குண்டு இல்லாமல் வேலை செய்கிறான்! அதான் எடுத்துட்டு போறேன்!
முட்டாள்! அவன் தப்பிவிட்டான்! அவனைக் கண்டால் சுட்டுத்தள்ளு!
அவனுக்கு என்னாச்சு? முகமூடியை எங்கே?
தெரியாது!
இவன் தாடையில் அபாயச் சின்னம் இருக்கு!

ஏய்... வேகமாக ஏறு! அவர்கள் நம்மை பார்த்து விட்டார்கள்!
இதோ ஏறி விட்டேன்!
அதோ அவன் தப்பிப் போறான்!
முட்டாளே! தப்பிக்கவிட் டாயே!
ஏய்... பெண்ணே! உன்னைக் காக்க வந்த முகமூடி குதிரையில் ஏறி தப்பி ஓடிவிட்டான்! இனி அவன் திரும்பி வரப்போவதில்லை!
மாயாவி!
அவருடன் தேருவும் வருகிறான்!
மந்திரவாதியிடம் இருந்து தப்பிவிட்டார்கள்!

நண்பர்களே! மந்திரவாதி தோட்டத்தில் உள்ளது வெறும் பொம்மைகள்... தேரு இதோ! இது அவனைப் போல பொம்மை!
உங்கள் தோழர்கள் மந்திரவாதியிடம் அடிமைகளாக உழைக்கிறார்கள்!
மந்திரவாதியை விடக்கூடாது!
அரண்மனைக்குப் போவோம்!
முகமூடி மக்களோடு வருகிறான்!
இவர்களை நம்மால் எதிர்க்க முடியாது!
அசையாதீர்கள்! இறுதிவரை போராடுவோம்!
காவலாளிகள் அவர்களை எதிர்க்கட்டும். நான் தப்பி ஓடிவிடுகிறேன்!

இனி ஆபத்து!
அடித்த கொள்ளை ஏழு
ஜென்மத்துக்குப் போதும்!
வேறு முட்டாள்கள் இருக்கும்
இடத்துக்கு போகப்
போகிறேன்!
மாய வேலை
கைவசம் இருக்கு! நீயும்
என்னுடன் வா!
முரண்டுபிடித்தால்
சுட்டுவிடுவேன்!
அதற்குள் காட்டுவாசிகள் அரண்
மனைக்குள் புகுந்து சிகப்பு உடை
காவலாளிகளை தாக்கினார்கள்.
நான் உன்னோடு
வரமாட்டேன்!
உயிர்மேல் ஆசை
இருந்தால் என்னுடன்
வா! அடிதடி ஓய்வதற்குள்
தொலைதூரம் போய்விடனும்!

அது எப்படி போகவிடுவேன்! உன் ஆட்களை அம்போன்னு விட்டுட்டு ஓடப்போறியா?
என்னிடம் இருந்து ஒரு ஈ காக்காகூட தப்பிக்க முடியாது! டயானா! நீ என்னை எதிர்பார்க்கவில்லையா?
அன்பே! நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்!
இந்த மொட்டைத்தலை மந்திரவாதியை உங்கள் கிராமத்துக்கு கொண்டுபோய் உழைக்க வையுங்க! அதுதான் சரியான தண்டனை!
இனி அங்கே மந்திரவாதியின் பயம் கொஞ்சமும் இல்லவே இல்லை. சின்ன குழந்தைகள்கூட அவன் பொம்மையை வைத்து விளையாடினார்கள்.
(முடிந்தது

அக்டோபஸ்!

கடலில் வாழும் அக்டோபஸ் உயிரினத்துக்கு எத்தனை கால்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பத்து கால்கள். படத்தில் இருப்பவர் அக்டோபசைத்தான் தோளில் தூக்கிக்கொண்டு நிற்கிறார். இவர் ஒரு கடல் ஆராய்ச்சியாளர். 25 ஆண்டுகளாக அக்டோபசைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். இவர் பெயர் ஜூம் கசோகிரோட். பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்.

கசேர்கிரோட் அக்டோபசைப் பற்றி பல வீடியோ படங்களை எடுத்திருக்கிறார். பல அரிய புத்தகங்களையும் எழுதி பரிசுகளை பெற்றிருக்கிறார். அக்டோபஸ் தன் கால்களால் படகுகளை வளைத்து பிளக்கும் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்கிறார்.

கோள்களின் வேகம்!

சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் ஒன்பது. அவை புதன் (மெர்க்குரி), வெள்ளி (வீனஸ்), செவ்வாய் (மார்ஸ்), வியாழன் (ஜூபிடர்), சனி (சேட்டர்ன்), யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ, பூமி.

இவற்றில் புதன்தான் சூரியனை வேகமாக சுற்றிவருகிறது. இதன் வேகம் விநாடிக்கு 48 கிலோ மீட்டர். பூமி ஒரு விநாடிக்கு 31 கிலோ மீட்டர் வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது. ஆனால் புளூட்டோவின் வேகமோ விநாடிக்கு 5 கிலோ மீட்டர்தான்.

★ இந்தியாவில் துக்கத்தின் அடையாளமாக கருப்பு நிறத்தை அணிகிறார்கள். துருக்கி நாட்டில் துக்கத்தின் நிறம் வயலட். ஆனால் பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் வெள்ளை நிறத்தை துக்கத்தின் அடையாளமாக அணிகிறார்கள்.



26

முன்கதை சுருக்கம்:-

மாணிக்கபுரியை பூபதி என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு மூன்று மகன்கள். திடீரென்று ஒரு நாள் நாட்டுக்குள் புகுந்த மாயக்குதிரையை பொன்னழகன் பிடித்தான். அது அவனுக்கு பல உதவிகளைச் செய்தது. இதுபிடிக்காத முத்தழகனும், மதியழகனும் பொன்னழகனை ஓரங்கட்ட சூழ்ச்சி செய்தனர். ஆனால், பொன்னழகன் குதிரையுடன் வெளியேறி, மரகதத் தீவுக்குச் சென்று அரசனிடம் போய் சேர்ந்தான். ஆனால் அங்குள்ள அமைச்சருக்கு அது பிடிக்காததால் பொன்னழகனை அரசனிடமே மாட்டிவிடப் பார்த்தார்கள்.

அதன்பேரில் இருவரும் அரண்மனைக்கு ஓடினார்கள். அப்பொழுது அரசர் படுக்கைக்குப் போய்விட்டார். மந்திரி அவரை எழுப்பினார்.

அரசர் விழித்து எழுந்ததுமே, "அரசே! மோசம்! மோசம்!!" என்று மந்திரி அலறினார்.

அதைக்கேட்டு அரசரும் திடுக்கிட்டார். "மந்திரி! என்ன நடந்தது சொல்லுங்கள்" என்று பதட்டத்துடன் கேட்டார்.

"உங்களைக் கொல்ல சதி நடக்கிறது!" என்றார், மந்திரி.

அதைக்கேட்டு அரசர் அதிர்ச்சி அடைந்தார். "என்னைக் கொல்ல சதியா! யார் செய்தது, சொல்லுங்கள்! அவன் தலையை வெட்டி வீசுகிறேன்" என்றார் அரசர்.

"உங்களைக் கொன்றுவிட்டு, அந்த அழகியை மணந்துகொள்ள சதி நடக்கிறது" என்றார், தளபதி.

"யார் சதி செய்வது? அதை முதலில் சொல்லுங்கள்! அவன் தலையை வாங்கிவிடுகிறேன்" என்று கத்தினார், அரசர்.

"சொல்வதற்கு பயமாக இருக்கிறது, அரசே" என்று பயந்தவர் போல நடித்தார், மந்திரி.

"பயப்படாதீர், மந்திரி. யாராக இருந்தாலும் தைரியமாகச் சொல்லும்" என்றார், அரசர்.

மந்திரி அடக்க ஒடுக்கமாக நின்றுகொண்டு, மெதுவாக "பொன்னழகன்" என்றார்.

"பொன்னழகனா..." அரசர் ஆச்சரியப்பட்டார். மந்திரி சொன்னதை அவரால் நம்பவே முடியவில்லை. "அவன் அப்படிச் செய்யமாட்டானே"

என்றார்.

"இல்லை, அரசே. அவன்தான் அப்படித் திட்டமிட்டு இருக்கிறான். உங்களைக் கொன்றுவிட்டு அந்த அழகியை மணந்துகொள்ளப் போகிறானாம்" என்றார், மந்திரி.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அரசர் கேட்டார்.

"தளபதியே சென்று உளவறிந்து வந்திருக்கிறார்" என்றார் மந்திரி.

ஒட்டுக் கேட்ட, எல்லா விவரத்தையும் தளபதி சொன்னார். "இருக்கும் இருக்கும்! இல்லாவிட்டால், அந்தச் சிறுவனால் இந்தக் காரியங்களை எல்லாம் எப்படி செய்ய முடியும்?" என்றார் அரசரும்.

"மந்திரி, தளபதிகளே உடனே புறப்படுங்கள்! அவன் தலையை வெட்டி வீசிவிட்டு வருவோம்!" என்று அரசர் ஆவேசமாகக் கிளம்பினார்.

"கொஞ்சம் பொறுங்கள் அரசே" என்றார், மந்திரி. "அவள் தந்தை சமுத்திர ராஜா. அவர் நாளை தன் மகளைத் தேடி இங்கே படையுடன் வருவார், அவர் படைகளை சமாளிக்க நமக்குப் பொன்னழகன் உதவி தேவைப்படும். ஆகவே, அதுவரையாவது நாம் அவனை உயிருடன் வைத்திருக்க வேண்டும்" என்றார்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று அரசருக்குத் தோன்றியது. ஆனால், "அதன்பின் அவன் அவளை மணந்துகொள்ளக் கூடாதே" என்றார், அரசர்.

"நாம் அதற்குள் முந்திக்கொள்ளலாம்" என்றார், மந்திரி. இப்பொழுது அவள் மணப்பெண்ணாக அலங்காரம் பண்ண தோழிகளை அனுப்புங்கள். பொழுது விடியுமுன் உங்களுக்கும் அவளுக்கும் திருமணம் நடத்திவிடலாம்" என்று மந்திரி சொன்னார்.

"இதனால் பொன்னழகன் கோபங்கொண்டால் என்ன செய்வது? அவன் உதவி நமக்கு கிடைக்காமல் போய்விடுமே" என்று அரசர் கேட்டார்.

"அவன் அப்படிப்பட்டவன் அல்ல. நன்றியுள்ளவன். நீங்கள் என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்ளுவான்" என்று தளபதி கூறினார்.

அதன்பேரில் திருமணத்திற்கு அரசர் ஒப்புக்கொண்டார். தோழிகளை அழைத்துவர ஆள் அனுப்பினார். தோழிகள் வந்ததும், "அந்தப்புரத்தில் இருக்கும் பெண்ணை மணப்பெண் போல சிங்காரித்து, சீக்கிரம் அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார்.

முத்தழகியை அலங்காரம் பண்ணி அழைத்துவர தோழிகள் அந்தப் புரத்திற்குப் போனார்கள். மந்திரியும் தளபதியும் அரசரை புது மாப்பிள்ளை போல அழகுபடுத்தத் தொடங்கினார்கள்.

'திடீர்' என்று அரசருக்கு ஒரு சந்தேகம் வந்தது! "மந்திரி! நீங்கள் சொன்னது எல்லாம் உண்மைதானா?" என்று கேட்டார்.

"ஏன் அரசே? என் மீது சந்தேகப்படுகிறீர்களா?" என்று மந்திரி கவலையோடு கேட்டார்.

"அந்தக் குதிரையைப் பார்த்துவிட்டால், எனக்கு சந்தேகமே இருக்காது" என்று அரசர் கூறினார்!

"உங்கள் விருப்பம் அப்படியென்றால், இப்பொழுதே பார்த்துவிட்டு வரலாம்" என்று தளபதி கூறினார்.

"பார்த்தால்தான் எனக்கு நம்பிக்கை ஏற்படும்" என்று கூறிக்கொண்டே அரசர் புறப்பட்டார். மந்திரியும், தளபதியும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

மூவரும் மாறுவேடம் அணிந்துகொண்டு, அரண்மனையைவிட்டு கிளம்பினார்கள்.

நேரே சத்திரத்துக்கு வந்தார்கள். குதிரை கட்டியிருந்த தொழுவத்தை மெதுவாக தளபதி திறந்துவிட்டார். "பாருங்கள், அரசே! இதுதான் அந்த மாயக் குதிரை" என்று மந்திரி காட்டினார். அரசர் நன்றாக எட்டிப் பார்த்தார்.

ஏதோ சத்தம் கேட்கிறதே என்று குதிரை திரும்பிப் பார்த்தது. மூவரும் நிற்பதைக் கண்டுகொண்டது. ஆனால், பார்க்காதது போல் முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றது.

அரசருக்கு இன்னொரு சந்தேகம்! "இது மாயக் குதிரை என்று எப்படி நம்புவது?" என்று அரசர் கேட்டார்.

"அரசே! முதலில் திருமணம் முடியட்டும். அதன்பின் எல்லா மர்மங்களும் உங்களுக்கு சந்தேகம் இல்லாமல் தெளிவாகிவிடும்" என்று மந்திரி கூறினார். "திருமணத்துக்கு நேரமாகிறதே! மணமகள் இந்நேரம் வந்திருப்பாள்! புறப்படுங்கள், அரசே!" என்று கிளப்பிவிட்டார்.

திருமணம் என்றதும் அரசர் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்டார். "ஆமாம். பொழுது விடியுமுன் திருமணத்தை முடித்துவிட வேண்டும்" என்று கூறிக்கொண்டே, அரண்மனைக்கு வேகமாகப் புறப்பட்டார். தொழுவத்தைப் பூட்டிவிட்டு, தளபதியும் மந்திரியும் அவரைப் பின்தொடர்ந்து போனார்கள்.

முத்தழகி அந்தப்புரத்தில் இருந்தாள். அவளை அழைக்கத் தோழிகள் போனார்கள். அப்பொழுது முத்தழகி அழுதுகொண்டு இருந்தாள். அவள் நினைவு எல்லாம் பொன்னழகனைப் பற்றியே இருந்தது.

"அம்மா! எழுந்திருங்கள்! குளித்துவிட்டு வாருங்கள்" என்று முத்தழகியிடம் ஒரு தோழி கூறினாள்.

"இந்த இரவிலே ஏன் குளிக்க வேண்டும்?" என்று முத்தழகி கேட்டாள்.

"சற்று நேரத்தில் உங்களுக்கும் அரசருக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அதற்காக உங்களை சிங்காரித்துக்கொண்டு வரும்படி அரசர் கட்டளையிட்டு இருக்கிறார்" என்று தோழிகள் சொன்னார்கள்.

அதைக் கேட்டு முத்தழகி அதிர்ச்சியடைந்தாள். நள்ளிரவில் திருமணம் நடக்கிறது! இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது என்பதை உணர்ந்தாள். பொன்னழகனுக்குத் தெரியாமல் இந்தத் திருமணத்தை நடத்த சூழ்ச்சி செய்கிறார்கள் என்று அறிந்தாள்.

"முடியாது! இந்தத் திருமணத்துக்கு நான் ஒப்புக்கொள்ளவேமாட்டேன்! உங்கள் அரசரிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று முத்தழகி தோழிகளை விரட்டினாள்.

ஆனால், அவர்கள் நகரவில்லை. "உங்களை அழைத்துக்கொண்டு போகாவிட்டால், எங்கள் தலை போய்விடும்" என்று நடுங்கிக்கொண்டே சொன்னார்கள்.

ஒருத்தி போய் குடத்தில் தண்ணீர் கொண்டுவந்தாள். முத்தழகியைப் பிடித்து வைத்துக்கொண்டு, அவள் தலையில் தண்ணீரை ஊற்றினார்கள். அவளுக்கு உடை மாற்றி, நகைகள் அணிவித்தார்கள். அரண்மனையில் இருந்த அத்தனை நகைகளையும் அவளுக்கு அணிவித்தார்கள். பூச்சூடினார்கள். கால்களிலும்

கைகளிலும் செம்பஞ்சுக் குழம்பு பூசினார்கள். அவளை மணமகள் போல அழகுபடுத்தினார்கள்.

முத்தழகி அழுதுகொண்டேயிருந்தாள். குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல, தோழிகள் கையில் சிக்கிக்கொண்டாள்! அவளுக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. சிலை போல அமர்ந்து இருந்தாள்.

அப்பொழுது அங்கே தளபதி வந்தார். "இன்னும் தயாராக வில்லையா? அரசர் தயாராக இருக்கிறார். மணமகளை அழைத்து வாருங்கள்!" என்று தோழிகளை விரட்டினார்.

"இதோ எல்லாம் முடிந்துவிட்டது. புறப்பட வேண்டியதுதான்" என்று தோழிகள் சொன்னார்கள்.

"சீக்கிரம் அழைத்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு தளபதி போய்விட்டார்.

அலங்காரம் செய்து முடித்ததும், "அம்மா, புறப்படுங்கள்" என்று தோழிகள் சொன்னார்கள். அப்பொழுது முத்தழகிக்கு திடீர் என்று ஒரு யோசனை தோன்றியது. உடனே அவள் முகம் மலர்ந்தது. "யாழ் இருக்கிறதா? எடுத்து வாருங்கள்!" என்று தோழிகளிடம் கேட்டாள்.

"எதற்கு?" என்று தோழிகள் கேட்டார்கள்.

“மணப்பெண் மணமேடைக்குப் போகும்முன் யாழ் வாசித்து மகிழ்வது எங்கள் குல வழக்கம். ஆகவே, நான் சிறிது நேரம் யாழ் வாசிக்க வேண்டும். யாழைக் கொண்டுவாருங்கள்” என்று முத்தழகி சொன்னாள்.

தோழிகள் யாழை எடுத்து வந்து கொடுத்தார்கள். முத்தழகி யாழை மீட்ட ஆரம்பித்தாள். யாழின் குரல் இனிமையாக ஒலித்தது. காற்றிலே கலந்து நாலாபுறமும் பரவியது.

இந்த யாழ் ஒலி பொன்னழகன் காதிலும் விழும்; அவன் தூங்கிக்கொண்டு இருந்தாலும் எழுவான்; முத்தழகிக்கு ஏதோ ஆபத்து என்று நினைப்பான்; அவளைக் காப்பாற்ற ஓடிவருவான்; இந்த எண்ணத்துடன்தான் முத்தழகி யாழை மீட்ட ஆரம்பித்தாள்.

நேரம் செல்லச் செல்ல, யாழின் இனிமையும் அதிகம் ஆயிற்று. ஊரெங்கும் அந்த இன்னிசை கேட்டது. சத்திரத்தில் தூங்கிக்கொண்டு இருந்த பொன்னழகன் காதிலும் பாய்ந்தது.

முத்தழகி நினைத்தது வீண் போகவில்லை. அவள் மீட்டிய யாழின் இசையைக் கேட்டு, சிறிது நேரத்தில் அவன் விழித்துக்கொண்டான். படுக்கையில் இருந்து எழுந்தான். யார் இவ்வளவு இனிமையாக யாழ் மீட்டுவது என்று சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணோம். அப்படியானால், இது, முத்தழகி வாசிக்கும் யாழ் ஒலியாகத்தான் இருக்கும் என்று நினைத்தான்.

அவள் ஏன் இந்நேரம் யாழ் வாசிக்கிறாள்? ஆபத்து ஏதும் ஏற்பட்டு இருக்குமோ? உதவி செய்ய அழைக்கிறாளோ? அல்லது, தன்னை நினைத்து அந்த ஏக்கத்தில் யாழ் மீட்டிக்கொண்டு இருக்கிறாளோ? பொன்னழகன் பலவாறாக யோசித்தான். சரி போய்ப் பார்த்து, அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு வருவோம் என்று புறப்பட்டான்.

தொழுவத்திற்கு வந்து, குதிரையை அவிழ்த்துவரப் போனான். அவனைப் பார்த்ததும், “ஏதேர ஆபத்து வருவது போல தோன்றுகிறது” என்று குதிரை கூறியது.

“ஏன், என்ன நடந்தது?” என்று பொன்னழகன் கேட்டான்.

அரசர், மந்திரி, தளபதி ஆகியவர்கள் தொழுவத்திற்கு வந்ததையும், பொன்னழகனைக் கொல்வது பற்றி பேசிக்கொண்டதையும் குதிரை கூறியது. முத்தழகியை அரசர் மணந்துகொள்ளப் போவதையும் தெரிவித்தது.

“அப்படியா விசயம்? அதுதான் அவள் என் உதவியைத் தேடி யாழை மீட்டியிருக்கிறாள். இருக்கட்டும், அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன்!” என்றான், பொன்னழகன்.

குதிரையில் ஏறிக்கொண்டு, அரண்மனைக்குப் புறப்பட்டான்.

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாம் 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

உங்களுக்கு தெரியுமா ?

★ ஆண்களின் இதயத்தைவிட பெண்களின் இதயம் மிகவும் வேகமாகத் துடிக்கிறது!

★ கி.பி. 1610-ம் ஆண்டில் அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 350 பேர்கள்தான்!

★ பசிபிக் பெருங்கடலில் சூரியன் உதிப்பதையும், அட்லாண்டிக் பெருங்கடலில் சூரியன் மறைவதையும் பனாமா நாட்டில் உள்ளவர்கள் மட்டுமே பார்க்க முடியும். மற்ற நாட்டினருக்கு இந்த அதிருஷ்டம் கிடையாது.

★ கங்காரு ஒருபோதும் தண்ணீர் குடிப்பதில்லை. சாப்பிடும்

உணவில் இருக்கும் தண்ணீரே அதற்குப் போதும்.

★ கோபி பாலைவனம் ஆசியாக் கண்டத்தில் உள்ளது.

★ பியர்மெயின் என்பது ஆப்பிளின் ஒருவகையாகும்.

★ இந்தியாவில் முதன்முதலில் கார்ட்டூன் படங்களை பத்திரிகைகளில் வெளியிட்டவர் போத்தன் ஜோசப்.

★ ஆப்பிரகாம் லிங்கத்தின் மரணச் செய்தி இரண்டு வாரம் கழித்துத் தான் ஐரோப்பாவுக்கே வந்து சேர்ந்தது. அந்தக் காலத்தில் தகவல் தொடர்பு அந்த அளவுக்கு இருந்திருக்கிறது.

★ ஐஸ் ஆக்கியில் பயன்படுத்தப் படும் பந்தின் பெயர் என்ன தெரியுமா? பக்!

★ ஐரோப்பாவில் வோல்கா ஆறு தான் மிகவும் நீளமான ஆறு.

★ இந்தியா 16 ஆண்டுகளாக அண்டார்டிகா ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இதுவும் ஓர் உலக சாதனையாக பேசப்படுகிறது!

★ சூரியனில் இருந்து 590 கோடி கி.மீ. தூரத்தில் புளூட்டோ கோள் இருக்கிறது. ஆனால் 14.95 கோடி கி.மீ. தூரத்தில் இருக்கிற கோள் எது தெரியுமா? பூமிதான்.

★ தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகமுள்ள மாவட்டம் எது தெரியுமா?

தென்னார்க்காடு மாவட்டம்.

★ இஸ்ரேலில் 100-க்கு 40 பேர் செல் போன் பயன்படுத்து கின்றனர்

முடியாதது இல்லை

பேராசிரியர் **எ. சோதி**

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர்.

முதுமை அடைந்த உழவன் இறந்துவிட அண்ணன், தம்பி இருவரும் வறுமையில் வாடினார்கள்.

என்ன செய்வது என்று சிந்தித்தான் அண்ணன். "தம்பி! நாம் இருவரும் இந்த ஊரில் கடினமாக உழைக்கிறோம். இருந்தும் வயிறார உண்ண முடியவில்லை. நான் வெளியூர் சென்று பொருள் ஈட்டித் திரும்புகிறேன். நீ அதுவரை நம் வீட்டைப் பார்த்துக்கொள். அதன்பிறகு வளமாக வாழலாம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

நெடுந்தொலைவு நடந்து ஓர் ஊரை அடைந்தான் அவன். எதிரில் ஒருவர் வந்தார். அவரைப் பண்ணையார் என்று அறிந்துகொண்ட அவன் "ஐயா! வேலை தேடி இந்த ஊருக்கு வந்தேன். எனக்கு ஏதேனும் வேலை கொடுங்கள்" என்று வேண்டினான்.

"நல்ல இடத்திற்குத்தான் வந்தாய். எனக்கும் ஒரு வேலையாள் தேவை. நல்ல ஊதியம் தருவேன். ஆனால்..." என்று இழுத்தார்.

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அப்படியே நடந்துகொள்வேன்" என்றான் அவன்.

"நீ என்னிடம் ஓராண்டு வேலை செய்ய வேண்டும். ஆண்டு முடிவில் மூன்று பொற்காசுகள் கூலியாகத் தருவேன். நான் என்ன வேலை சொன்னாலும் நீ செய்து முடிக்க வேண்டும். அப்படி உன்னால் முடிக்க முடியாத ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு பொற்காசைக் குறைத்துக்கொள்வேன்" என்றார் அவர்.

சூழ்ச்சியை அறியாத அவன், "இன்றே வேலையில் சேர்ந்து கொள்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் செய்து முடிக்கிறேன்" என்றான்.

அவரிடம் வேலைக்குச் சேர்ந்த அவன் உண்மையாக உழைத்தான். நாட்கள் ஓடின. ஓராண்டு கழிய இன்னும் ஒருநாள்தான் இருந்தது.

மூன்று பொற்காசுகள் நாளை கிடைக்கும். ஊருக்குச் சென்று தம்பியுடன் வளமாகவாழலாம் என்று மகிழ்ச்சியுடன் இருந்தான் அவன்.

பொழுது விடிந்தது. பண்ணையாரிடம் சென்ற அவன் "ஐயா! இன்றோடு ஓராண்டு முடிகிறது. நீங்கள் சொல்லிய கூலியைக் கொடுத்தால் நான் ஊருக்குச் செல்வேன்" என்று இழுத்தான்.



“இன்று மாலைதான் நான் சொன்ன ஓராண்டு முடிகிறது. உனக்கு மூன்று எளிய வேலைகள் வைக்கிறேன். மாலைக்குள் அவற்றை முடித்துவிட்டுக் கூலியை வாங்கிக்கொள். பிறகு மகிழ்ச்சியுடன் உன் ஊருக்குச் செல்” என்றார் அவர்.

“முதல் வேலை என்ன சொல்லுங்கள்?” என்று கேட்டான் அவன்.

“அதோ பார். அங்கே இரண்டு விலை உயர்ந்த பீங்கான் சாடிகள் உள்ளன. ஒன்று பெரிய சாடி. இன்னொன்று சிறிய சாடி. அந்தச் சிறிய சாடிக்குள் பெரிய சாடியை வைக்க வேண்டும். இதுதான் நீ செய்யவேண்டிய முதல் வேலை”. என்றார் அவர்.

“ஐயா! எப்படிச் சிறிய சாடிக்குள் பெரிய சாடியை வைக்க முடியும்? யாராலும் செய்யமுடியாத செயலைச் செய்யச் சொல்கிறீர்களே? இது என்ன அநியாயம்?” என்று அலறினான் அவன்.

“செய்ய முடியுமா முடியாதா என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் சொன்ன இந்த வேலையைச் செய்யாவிட்டால் உன் கூலியில் ஒரு பொற்காசைக் குறைத்துக்கொள்வேன்” என்று சொன்னார் அவர்.

வேறு வழியில்லாத அவன் “ஐயா! அடுத்த வேலை என்ன? அதைச்

சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"அந்த அறைக்குள் ஈரமான நெல் உள்ளது. நெல்லை நீ வெளியே எடுத்துச் செல்லாமல் காய வைக்க வேண்டும். அதுதான் இரண்டாவது வேலை" என்றார் அவர்.

திடுக்கிட்ட அவன் "ஈர நெல்லை வெளியே எடுத்துச் செல்லாமல் எப்படிக் காய வைக்க முடியும்? நீங்களே வழி சொல்லுங்கள்" என்று கோபத்துடன் கேட்டான்.

"வழி எல்லாம் எனக்குத் தெரியாது. நான் என்ன சொல்கிறேனோ அதை நீ செய்ய வேண்டும்" என்றார் அவர்.

'இரண்டு பொற்காசுகள் போய்விட்டன. ஒரு பொற்காசாவது கிடைக்காதா?' என்ற எண்ணத்தில் "மூன்றாவது வேலை என்ன?" என்று சோகத்துடன் கேட்டான் அவன்.

"இந்த வேலை மிக எளிய வேலை. என் தலையின் எடையை மட்டும் நீ சரியாகச் சொல்ல வேண்டும். அவ்வளவுதான்" என்றார் அவர்.

"ஐயா! உங்கள் தலையின் எடையை மட்டும் எப்படிச் சொல்ல முடியும்? ஓராண்டு உங்களிடம் உண்மையாக உழைத்தேன். என் மீது இரக்கம் காட்டுங்கள்" என்று கெஞ்சினான் அவன்.

"நான் சொன்ன மூன்று வேலைகளை நீ செய்யவில்லை. ஒப்பந்தப்படி உனக்குத் தரவேண்டிய மூன்று பொற்காசுகளை நான் தரவேண்டாம். போய் வா. இனி இங்கு நீ கெஞ்சுவதாலோ அழுவதாலோ என் உள்ளம் இரங்காது" என்று கண்டிப்புடன் சொன்னார் அவர்.

தான் நன்றாக ஏமாற்றப்பட்டது அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. தள்ளாடியபடி தன் ஊர் வந்து சேர்ந்தான் அவன். தம்பியிடம் நடந்ததை எல்லாம் சொல்லி அழுதான் அவன்.

"அண்ணா! உன்னை ஏமாற்றிய அந்தப் பண்ணையாரைப் பழிக்குப் பழிவாங்குகிறேன். வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு என்பதை அவனுக்குப் புரிய வைக்கிறேன். நான் கற்றுத் தரும் பாடத்தை அவன் என்றும் மறக்க மாட்டான்" என்று கோபத்துடன் சொல்லிவிட்டுப் புறப்பட்டான் தம்பி.

அண்ணன் வேலை பார்த்த அதே ஊரை அடைந்தான் அவன்.

பண்ணையாரைச் சந்தித்த அவன், "ஐயா! நான் வெளியூர். வேலை தேடி இங்கு வந்தேன். ஏதேனும் வேலை கிடைக்குமா?" என்று பணிவுடன் கேட்டான்.

'ஏமாளிகளுக்கு உலகில் பஞ்சமே இல்லை. புதிதாக ஒரு ஏமாளி கிடைத்திருக்கிறான். இவனை ஏமாற்றி வேலை வாங்க வேண்டும்' என்று நினைத்தார் அவர்.

"எனக்கும் உன்னைப் போல ஒரு வேலையாள் தேவை. நீ என்னிடம்

ஓராண்டு வேலை செய்ய வேண்டும். அப்படி வேலை செய்து முடித்ததும் உன் கூலியாக மூன்று பொற்காசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். நான் சொல்லும் வேலையில் ஒன்றைச் செய்யத் தவறினால் கூலியில் ஒரு பொற்காசைக் குறைத்துக்கொள்வேன். உனக்கு விருப்பமானால் என்னிடம் வேலையில் சேரலாம்" என்று இனிமையாகப் பேசினார் அவர்.

"நீங்கள் என்னை ஏமாற்றவா போகிறீர்கள்? நான் இன்றே வேலையில் சேர்ந்துவிடுகிறேன்" என்றான் அவன்.

அவர் சொல்லும் வேலைகளை எல்லாம் ஒழுங்காகச் செய்து வந்தான் அவன். ஓராண்டு நிறைவுறும் நாள் வந்தது.

காலையில் அவனை அழைத்த பண்ணையார் "இன்று மாலையுடன் நீ வேலையில் சேர்ந்து ஓராண்டு கழியப்போகிறது. இன்று நான் சொல்லும் எளிய வேலைகள் மூன்றைச் செய்ய வேண்டும். பிறகு உனக்குரிய கூலி மூன்று பொற்காசுகளைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் செல்லலாம்" என்றார்.

ஏதும் அறியாதவன் போல, "ஐயா! நான் முதலில் செய்யவேண்டிய வேலை என்ன?" என்று கேட்டான்.

"இதோ இங்கே விலை உயர்ந்த இரண்டு பீங்கான் சாடிகள் உள்ளன. ஒன்று பெரியது. இன்னொன்று சிறியது. நீ செய்யவேண்டிய வேலை அந்தச் சிறிய சாடிக்குள் பெரிய சாடியை வைக்க வேண்டும். செய்துவிட்டு வா" என்றார் அவர்.

"எளிய வேலைதான்" என்ற அவன் அங்கே ஒரு மூலையில் இருந்த தடி ஒன்றை எடுத்தான். அந்தத் தடியால் அவர் கண் எதிரிலேயே பெரிய சாடியை ஓங்கி அடித்தான். விலை உயர்ந்த அந்தச் சாடி உடைந்து நொறுங்கியது.

பதைபதைத்த அவர், "டேய்! நான் என்ன சொன்னேன்? நீ என்ன செய்கிறாய்? விலை உயர்ந்த சாடியை உடைத்து நொறுக்கிவிட்டாயே. எவ்வளவு காலமாக அதை வைத்துப் பாதுகாக்கிறேன் தெரியுமா?" என்று அலறினார்.

"ஐயா! பெரிய சாடியை உடைத்தால்தான் அதைச் சிறிய சாடிக்குள் வைக்க முடியும். அதனால்தான் அந்தச் சாடியை உடைத்தேன்" என்றான் அவன்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார் அவர்.

"ஐயா! நான் செய்யவேண்டிய இரண்டாவது வேலை என்ன?" என்று பணிவுடன் கேட்டான் அவன்.

'என்னிடமா உன் திறமையைக் காட்டுகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்?' என்று தனக்குள் கறுவினார் அவர்.

“அந்த அறைக்குள் ஈர நெல் உள்ளது. அந்த நெல்லை நீ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. ஆனால் அந்த நெல்லைக் காய வைக்க வேண்டும். இதுதான் நீ செய்யவேண்டிய இரண்டாவது வேலை” என்றார்.

“இதுவும் எளிய வேலைதான்” என்ற அவன் அந்த வீட்டுக் கூரையின்மேல் ஏறினான். கூரையைப் பிரித்துக் கீழே தள்ளத் தொடங்கினான்.

இதைக் கண்டு பதறிய அவர் “டேய்! கூரையைப் பிரித்து என் வீட்டையே நாசம் ஆக்குகிறாயே. கீழே இறங்கு” என்று கோபத்துடன் கத்தினார்.

“ஐயா! அறைக்குள் இருக்கும் நெல்லைக் காய வைக்கச் சொன்னீர்கள். கூரையைப் பிரித்தால்தானே கதிரவன் ஒளி நேராக அறைக்குள் படும். அங்கிருக்கும் நெல் காயும். அதனால்தான் கூரையைப் பிரித்து எறிகிறேன். ஒவ்வொரு முறையும் வேலை இடுகிறீர்கள். அதை நான் செய்து முடிப்பதற்குள் நீங்களே தடுத்துவிடுகிறீர்கள். இந்த முறையாவது முழுமையாகச் செய்யவிடுங்கள்” என்றபடியே மேலும் கூரையைப் பிரித்து எறிந்தான்.

அந்த வீடு கூரை இல்லாமல் குட்டிச் சுவரைப் போலக் காட்சி அளித்தது.

சரியான அறிவாளியிடம் மாட்டிக்கொண்டோம் என்ற உண்மை அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது.

"டேய்! நான் சொன்ன இரண்டாம் வேலையைச் செய்துவிட்டாய். கீழே இறங்கு" என்றார்.

கீழே இறங்கிய அவன், "ஐயா! நான் செய்யவேண்டிய மூன்றாவது வேலை என்ன?" என்று கேட்டான்.

'நான் இடும் மூன்றாவது வேலையை எந்தக் கொம்பனாலும் செய்ய முடியாது. இவன் ஏமாற்றம் அடைவதைப் பார்த்து மகிழ வேண்டும்' என்று நினைத்தார் அவர்.

"என் தலையின் எடை என்ன? நீ அதைச் சரியாகச் சொல்ல வேண்டும். இதுதான் நீ செய்யவேண்டிய மூன்றாவது வேலை" என்றார் அவர்.

"கடினமான வேலையாக இருக்கும் என்று நினைத்தேன். எளிய வேலைதான் தந்திருக்கிறீர்கள்" என்ற அவன் தோட்டத்திற்குச் சென்றான். பெரிய பூசனிக்காய் ஒன்றைப் பறித்தான்.

அதைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்த அவன் "உங்கள் தலையின் எடையும் இந்தப் பூசனிக்காயின் எடையும் ஒன்றுதான். இதோ தராசு உள்ளது. இதில் ஒரு தட்டில் பூசனிக்காயை வைக்கிறேன். இன்னொரு தட்டில் உங்கள் தலையை வெட்டி வைக்கிறேன். இரண்டும் சமமாக இருப்பதை நீங்களே பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே கையில் கத்தியுடன் அவர் தலையை வெட்டுவதற்காக வந்தான்.

'ஐயோ! இவனிடம் நன்றாக மாட்டிக்கொண்டேனே! என் தலையை எடுக்காமல் விடமாட்டான் போல இருக்கிறதே' என்று நடுங்கினார் அவர்.

"இந்தப் பூசனிக்காயின் எடையும் என் தலையின் எடையும் ஒன்றுதான். அதற்காக என் தலையைத் தராசுத் தட்டில் வைத்து எடை பார்க்க வேண்டாம். என்னை விட்டுவிடு. இனி யாரிடமும் இப்படி விளையாட மாட்டேன்" என்று கெஞ்சினார் அவர்.

இரக்கப்பட்ட அவன் "இனியேனும் ஏழை எளிய மக்களை ஏமாற்றுவதை விட்டுவிடுங்கள். எனக்குரிய மூன்று பொற்காசுகளுடன் என் அண்ணனை ஏமாற்றிய மூன்று பொற்காசுகளையும் சேர்த்துக் கொடு. உன்னை உயிருடன் விடுகிறேன்" என்றான் அவன்.

ஆறு பொற்காசுகளை அவனிடம் தந்தார் அவர். அங்கிருந்து புறப்பட்டான் அவன்.

அவரும் அன்றிலிருந்து மற்றவர்களை ஏமாற்றுவதை விட்டுவிட்டார்.

★

அமுத்த காமிக்ஸ்

கழுகு மனிதன்

முட்டையில்
இருந்து பிறந்தவன்,
கழுகைப் போல
பறக்கிறான்!

வித்தியாசமான படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!!

ஏப்ரல் 1 "ராணி காமிக்ஸ்" இதழில் வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை–600 007.

வழியைக் கண்டுபிடியுங்கள் !

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வழியில் உள்ளே புகுந்து வெளியே வாருங்கள் பார்ப்போம்!



Regd. with the registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

MARCH 16, 1998

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்



தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக
32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்